ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 243/38—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17
243/38 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு 68(70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976 ம் ஆண்டு திசெம்பர் மீ 17 ந் உ.

ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள், அவசரகால (தனியார்துறை) மேலதிகப் படிபற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இந்த ஒழுங்குவிதிகளால் வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவம், பணி அல்லது கடமை எதனையும் அத்தகைய அதிகாரி தொழிற்றிணைக்களத்தின் அலுவலர் எவருக்கும் கையளிக்கலாம்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளானவை, எழுத்திலுள்ள வேறேதேனும் சட்டத்தின் அல்லது வேலைக் கமர்த்துதல் தொடர்பிலான வாய்மொழி மூலமான, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஒப்பந்தத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், வலுவும் பயனுமுடையனவாதல் வேண்டும்; அதற்கிணங்க இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் அல்லது ஒப்பந்தத்துக்கும் இடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் நேருமிடத்து, அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தம் எதனையும்விட இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

4. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், தொழில் எதிலும், மாதத்துக்கு எண்ணூறு ரூபாவுக்கு மேற்படாத மொத்த சம்பாத்தியமுடைய வேலையாள் ஒருவரை வேலைக்கமர்த்தியுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், 1975 மார்ச்சு மாதம் உட்பட ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், அத்தகைய வேலையாளுக்கு, இருபத்தைந்து ரூபாவுக்குக் குறையாதவொரு படியைக் கொடுத்தல் வேண்டும் :

ஆயின்—

(அ) அத்தகைய தொழில்தருநர், 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் 10 ஆந் தேதிய 14,975 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட ஏதேனும் கூட்டு உடன்படிக்கையினால், அல்லது, அத்தகைய ஏதேனும் கூட்டு உடன்படிக்கை தொடர்பில் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 10 (2) ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றினால் கட்டுப்படுத்தப்பட்ட தொழில்தருநராக, அல்லது அத்தகைய கூட்டு உடன்படிக்கையின்கீழ் கொடுக்கற்பாலதான பணத்தொகைகளிலும் வாய்ப்புக் குறைந்தனவாயல்லாத கூலிகளையும், மீண்டும் செலுத்தற்குரியதாகா வாழ்க்கைச் செலவுப் பணிக்கொடையையும், தன்னிச்சையாகவோ வேறுவிதமாகவோ கொடுக்கும் தொழில்தருநரொருவராயிருக்குமிடத்து, கொடுக்கற்பாலதான படியானது, 1975 ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்கு அத்தகைய வேலையாளுக்குரிய மாதாந்தக் கூலியின் பத்துச் சதவீதமாக, அல்லது இருபத்தைந்து ரூபாவாக, இவற்றுள் எது குறைந்ததோ அதுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தொழில்தருநர், தேயிலை வளர்த்தல், உற்பத்தித்தொழிலில், அல்லது இறப்பர் வளர்த்தல், உற்பத்தித்தொழிலில், அல்லது கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தல், உற்பத்தித் தொழிலில், அல்லது தெங்கு வளர்த்தல் தொழிலில், அல்லது கறுவாத்தொழிலில், அல்லது புகையிலைத் தொழிலிலான தொழில்தருநரொருவராயிருக்குமிடத்து, கொடுக்கற்பாலதான படியானது, 1975 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் அவ்வேலையாளின் ஆகக்குறைந்த நாட்கூலியின் வீதத்தில் அம்மாதத்தின்போது வேலை செய்த நாட்களுக்கு, அத்தகைய வேலையாளுக்குக் கூலியாகக் கொடுக்கற்பாலதான பணத்தொகையின் பத்துச் சதவீதமாக, அல்லது இருபத்தைந்து ரூபாவாக, இவற்றுள் எது குறைந்ததோ அதுவாகவிருத்தல் வேண்டும்.

(2) வேலையாள் ஒருவர், துண்டுவீத அல்லது நாள்வீத அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டவிடத்து, இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் அவருக்குக் கொடுக்கற்பாலதான தொகையானது, 1975 ஆம் ஆண்டு சனவரி மாதத்துக்கான கூலி வீதத்தின் அடிப்படையின், துண்டுவீதத்தில் அல்லது நாள்வீதத்தில் அவருக்குக் கொடுக்கற்பாலதான கூலிகளின் பத்துச் சதவீதத்திலும் குறையாத பணத்தொகையாயிருத்தல் வேண்டும் :

ஆயின், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான தொகையானது மாதம் ஒன்றுக்கு இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படுதலாகாது.

(3) மாதவீதத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட வேலையாளொருவர், அவருக்கு வேலையளிப்பதற்குத் தொழில் தருநர் தவறினர் என்ற காரணத்துக்காக அல்லாத வேறு எக்காரணத்துக்காகவும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது ஒப்பந்தத்தினால் விதிக்கப்பட்டவாறு தேவைப்பட்ட நாட்களுக்கு வேலைசெய்யாதவிடத்து, அத்தகைய வேலையாளுக்குக் கொடுக்கற்பாலதான படியானது, அவர் வேலைசெய்த நாட்களுக்கு விகிதசமமாய இருத்தல் வேண்டும்.

(4) மொத்த மாதச் சம்பாத்தியம் எண்ணூறு ரூபாவுக்கு மேற்பட்டும், ஆனால் எண்ணூற்றியெழுபத்தைந்து ரூபாவுக்குக் குறைவாகவும் உள்ள வேலையாளின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், 1975 ஆம் ஆண்டு மாச்சு மாதம் உட்பட ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், எண்ணூற்றியெழுபத்தைந்து ரூபாவுக்கும், அம்மாதத்துக்கான வேதனமாக அல்லது கூலியாக அவ்வேலையாளால் பெறப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசத்துக்குச் சமமானதொரு தொகையை அத்தகைய வேலையாளுக்குப் படியாகக் கொடுத்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள படியானது,—

(அ) 1967 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டு உடன்படிக்கை ஏற்புடைத்தாகும் வேலையாளுக்கு ;

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட கூட்டு உடன்படிக்கையின்கீழ் கொடுக்கற்பாலதான தொகையினும் வாய்ப்புக் குறைந்தனவல்லாதனவான கூலிகளையும் மீண்டும் செலுத்தற்குரியதாகா வாழ்க்கைச்செலவுப் பணிக்கொடையையும், தன்னிச்சையாக அல்லது வேறுவகையாக தொழில்தருநர் எந்த வேலையாளுக்குக் கொடுக்கின்றாரோ அந்த வேலையாளுக்கு ;

(இ) கொழும்பு பாவனையாளர் சுட்டிக்கு இணங்கத் தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கைச்செலவுப் படியைத் தொழில்தருநர் எந்த வேலையாளுக்குக் கொடுக்கின்றாரோ அந்த வேலையாளுக்கு ;

(ஈ) 1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 16அ என்னும் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட தருமநிலையம் என வெளிப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேலையாளுக்கு ;

(உ) எந்த வேலையாளின் தொழில்தருநர், 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் 10 ஆந் தேதிய 14,975 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட ஏதேனும் கூட்டு உடன்படிக்கை தொடர்பில், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 10 (2) ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றினால் கட்டுப்பட்டவராயும், அத்தகைய உடன்படிக்கைக்கு இணங்கக் கூலிகளையும் மீண்டும் செலுத்தற்குரியதாகா வாழ்க்கைச் செலவுப் பணிக்கொடையொன்றையும் கொடுத்துவருபவராயும் இருந்து, அத்தகைய தொழில் தருநரால் வேலைக்கமர்த்தப்பட்ட வேலையாளர்களின் எண்ணிக்கை இருபத்தைந்துக்குக் குறையாததாயிருக்குமிடத்து அந்த வேலையாளுக்கு,

கொடுபடற்குரியதாதலாகாது.

6. நான்காம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் தொழில்தருநரொருவரால் வேலையாளொருவருக்குக் கொடுக்கற்பாலதான படியானது, அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்க, 1975 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் தொடர்பிலும் கொடுக்கற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், 7 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 1975 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் தொடர்பிலான படியை, 1975 ஆம் ஆண்டு மார்ச்சு 20 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ தொழில்தருநர் கொடுத்தலும் வேண்டும்.

7. இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் எந்தத் தொழிலிலுமுள்ள வேலையாள் எவருக்கும் கொடுக்கற்பாலதான தொகையானது, எழுத்திலுள்ள சட்டம் எதனதும் நோக்கங்களுக்காக, அவரது கூலியின் பாகமாய் அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அதற்கிணங்க, தொழில்தருநர், அத்தகைய வேலையாளின் கூலியைக் கொடுக்கவேண்டிய காலத்தினுள் அத்தகைய பணத்தொகையைக் கொடுத்தல் வேண்டும்.

8. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு மார்ச்சு 1 ஆந் தேதிக்கு நேரேமுன்னர், ஏதேனும் தொழிலில் தொழில்தருநர் எவராலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு வேலையாளும், அத்தகைய தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருக்கும் அவ்வளவு காலம்வரை, 1975 மார்ச்சு 1 ஆந் தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று அத்தகைய வேலையாள் துய்த்த வேதனம், படி அல்லது பணத்திலான ஏனைய கொடுப்பனவுகளிலும் பார்க்க, (அவை எப்பெயர் கொண்டு அல்லது குறிப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படினுஞ்சரி) வாய்ப்புக் குறைந்தனவல்லாத வேதனம், படி அல்லது ஏனைய பணக்கொடுப்பனவுகள் தொடர்பான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றின்மீது அத்தகைய தொழில்தருநரால் அவ்வாறு தொடர்ந்து வேலைக்கமர்த்தப்படல் வேண்டும் ; இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான படியானது அத்தகைய வேதனம், படி அல்லது கொடுப்பனவுகளைவிட மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

9. நான்காம் அல்லது ஆறாம் ஒழுங்குவிதியின்கீழ் வேலையாள் ஒருவருக்குக் கொடுக்கற்பாலதான ஏதேனும் பணத்தொகையைத் தொழில்தருநர் ஒருவர் அவ்வேலையாளுக்குக் கொடுக்கத் தவறியமை காரணமான தவறொன்றுக்கு அத்தகைய தொழில்தருநர் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதனமேல், அத்தகைய தவறுக்கென நீதிமன்றம் விதித்திருக்கக்கூடிய வேறேதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்தினுள் அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகையைக் கொடுக்கும்படி நீதிமன்றமானது அத்தகைய தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம் ; அத்தகைய பணத்தொகை அவ்வாறு கொடுக்கப்படாவிடின் அப்பணத்தொகை நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போல, நீதிமன்றக் கட்டளையின்மூலம் அறவிடப்படலாம்.

10. இந்த ஒழுங்குவிதிகளில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"ஆணையாளர்", "தொழில்தருநர்", "கூலி" என்பன, முறையே (136 ஆம் அத்தியாயமான) சம்பள நிருணயச் சபைக் கட்டளைச்சட்டத்தில் உள்ள அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"கூட்டு உடன்படிக்கை" என்பது, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில் உள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"சம்பாத்தியம்" என்பது, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் ;

"தொழில்" என்பது, தொழில்தருநர் ஒருவரால் அல்லது வேலையாள் ஒருவரால் கொண்டு நடாத்தப்படும், புரியப்படும், அல்லது செய்யப்படும் கைத்தொழில், வியாபாரம், பொறுப்பு முயற்சி, செய்தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் எதையும் உள்ளடக்குவதோடு, ஏதேனும் தொழிலின் பிரிவையும் அல்லது அதில் ஏதேனும் பணியையும் அல்லது செய்முறையையும் உட்படுத்தும் ; ஆனால் தொழில்தருநர் என்ற தன்மையில் மூலதனம் முழுவதும் அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது முக்கியமாக, பாலியத் தவறாளிகளுக்கு அல்லது அநாதைகளுக்கு அல்லது இலம்பாடுற்றவர்களுக்கும் வாய்பேச முடியாதவர்களுக்கும், காது கேளாதவர்களுக்கும் அல்லது கண் தெரியாதவர்களுக்கும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காகக் கொண்டு நடாத்தப்படும் கைத்தொழில், வியாபாரம், அல்லது பொறுப்பு முயற்சி எதனையும் உட்படுத்தாது ;

"வேலையாள்" என்பது தொழில், கைத்தொழில், வியாபாரம், செய்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் எதிலும் வேலை எதனையும் புரிவதற்காக வாய்மொழி மூலமாக, எழுத்துமூலமாக, வெளிப்படையாக அல்லது உட்கிடையாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் வேலைக்கமர்த்தப்பட்ட ஆள் ஒருவர் எனப் பொருள்படுவதுடன் எத்தனும எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு விதத்தினால் அவரது வேதனம் அல்லது கூலிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலையாள் ஒருவரையும், துண்டுவீத அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட வேலையாள் ஒருவரையும் உள்ளடக்கும் ; ஆனால் அது வீட்டு வேலையாளொருவரை அல்லது தொழில்தருநரின் சொந்தக் கார்ச் சாரதியை உட்படுத்தாது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.